நகர் ஊரமைப்புத்துறை (DTCP)

மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் - நாமக்கல் மாவட்டம்


இராசிபுரம் ஊராட்சி ஒன்றியம்

நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் வட்டம், காக்காவேரி ஊராட்சி மற்றும் கிராமம், ச.எண் - 265/1B2 -ல் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம்.(திட்டமில்லா பகுதி)

அளவு : 1:400 (அ) 1:33'0"

இணையதள விண்ணப்பம் எண் : NKL / 20PPDOW5 / 57554 / 2025

N



கி.எண். 37 ஒடுவன்குறிச்சி
ச.எண் - 10

குறிப்பு

மனைப்பிரிவின் மொத்தப்பரப்பு..... : 2.28 ஏக்கர் (அ) 9227.00 சதுரமீட்டர்

கோரிய மனைகள்..... : 46

ஒதுக்கிய மனைகள்..... : 46

மனைப்பிரிவு எல்லை.....

நிலையில் உள்ள சாலை.....

பொது ஒதுக்கீடுகள; :

உள்ளாட்சிக்கு மனுதாரர் தானமாக ஒப்படைக்கப்பட்டவை :-

(தானப்பத்திர எண்.182/2026, நாள்.13.01.2026)

மனைப்பிரிவு சாலை (ம) மூலைமுடக்குகளின் பரப்பு : 3169.75 சதுரமீ

பொது உபயோகம் (TNCDBR 47 (8) -ன் படி தானமாக ஒப்படைக்கப்பட்டவை :

1. பொது உபயோக ஒதுக்கீட்டின் பரப்பளவு
(தானப்பத்திர எண்.182/2026, நாள்.13.01.2026) : 39.72 சதுரமீ (1.10%)

2. TANGEDCO - க்கான ஒதுக்கீட்டின் பரப்பளவு
(தானப்பத்திர எண்.181/2026, நாள்.13.01.2026) : 64.22 சதுர.மீ (1.78%)

அரசாணை எண் -18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 04-02-2019-ன் படி பூங்காவிற்கான தொகை அரசு வழிகாட்டி மதிப்பின்படி மனுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது.

மூலை முடக்குகள்

12.0 மீ அகல சாலை வரைக்கும் 1.5மீ X 1.5மீ மூலை முடக்கு விடப்பட வேண்டும்.

12.0 மீ அகல சாலைக்கு மேல் 4.5மீ X 4.5மீ மூலை முடக்கு விடப்பட வேண்டும்.

நிபந்தனைகள்:

1. அரசாணை எண்-18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்-04.02.2019, (ம) அரசாணை எண்-16 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்-31.01.2020-ன் படி மனைப்பிரிவு சாலைகள் மூலை முடக்குகள் உட்பட பூங்கா மற்றும் LOCALBODY -ற்கு பொது உபயோகம் ஆகியன உள்ளாட்சிக்கும் மற்றும் TANGEDCO -ற்கு பொது உபயோகம் TANGEDCO/உள்ளாட்சிக்கு தானமாக பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
2. அரசாணை எண் -181, வீட்டுவசதி (ம) நகர்புற வளர்ச்சித்துறை நாள்.09.12.2020, மற்றும் அரசாணை எண் -141, வீட்டுவசதி (ம) நகர்புற வளர்ச்சித்துறை நாள்.16.07.2022 ஆகியவற்றில் தெரிவித்துள்ளவாறு உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு தேவையான தார் சாலை வசதி, மழைநீர் வடிகால் வசதி, மேல்நிலை நீர்தேக்க தொட்டியுடன் கூடிய குடிநீர் வசதிகள் (ம) தெருவிளக்கு வசதி மற்றும் இதர வசதிகள் ஆகிய அடிப்படை வசதிகள் மனுதாரரால் அமைக்கப்பட்ட பின்னரே இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.
3. இம் மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும் முன் இடத்தினை எந்தத்துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும், எந்தத் துறைக்காகவும் நில ஆர்ஜிதப் பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பப்படவில்லை என்றும், உள்ளாட்சி உறுதி செய்ய வேண்டும்.
4. நில உரிமை குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவைதல்ல என அறியப்பட்டால், மனைப்பிரிவுக்கு தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கியதில் ஏதேனும் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில் நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி நகர் ஊரமைப்பு இயக்குநர்/ஆணையர் அவர்களால் இரத்து செய்யப்படும்.
5. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்புத்துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபடங்களையும் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.
6. நகர் ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை, தொழில் நுட்ப அனுமதி-திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் கிரையப்பத்திரம், சுத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம், பொது அதிகார பத்திரம் மேலும் பல விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது, அதன் மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.
7. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைப்படத்தினை எவ்வித மாற்றமும், விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில்; 6' X 4' அளவிலான நிரந்தர தகவல்பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்படவேண்டும்.
8. The Tamil Nadu Government in G.O.Ms.No: 112, Housing and Urban Development Department dated : 22.6.2017 have approved the Tamil Nadu Real Estate (Regulation & Development) Act 2016. The promoter has to advertise, market, book, sell or offer for sale, or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be, in any Real Estate Project or part of it only after registering the Real Estate Project with the Real Estate Regulatory Authority.
9. உத்தேச மனைபிரிவில் எந்தவித மாற்றம் செய்வதாக இருந்தாலும் இத்துறையின் முன் அனுமதி பெறப்பட வேண்டும்.
10. உத்தரவு கடிதத்தில் குறிப்பிட்டுள்ள சிறப்பு நிபந்தனைகள் (ம) மனைப்பிரிவு நிபந்தனைகள் தவறாது கடைபிடிக்கப்படல் வேண்டும்.
11. உத்தேச மனைப்பிரிவு இடத்தில் நீதிமன்ற வழக்குகள் ஏதேனும் நிலுவையில் இருப்பின் இம்மனைப்பிரிவுவின் அனுமதி செல்லதக்கதல்ல.
12. உத்தேச மனைப்பிரிவின் ஊடே குறைந்த மற்றும் உயர் அழுத்த மின்கம்பிபாதை ஆகியன செல்லுமாயின் அவைகள் சாலையின் போக்கிற்கு ஏற்றவாறு மாற்றியமைக்கப்படல் வேண்டும்.
13. உத்தேச மனைப்பிரிவின் ஊடே நீர் நிலைகள் அமையுமாயின் அதற்கு பாதிப்பு ஏற்படாதவாறு கட்டிடங்கள் கட்டப்பட வேண்டும்.
14. அரசாணை எண்.155 வீட்டுவசதி (ம) நகர்புற வளர்ச்சித்துறை நாள்.08.10.2025-ன் படி தொலை தொடர்பு கம்பிகளுக்கு இடமளிக்கும் வகையில் குறைந்தபட்சம் 0.15மீ விட்டம் கொண்ட வெற்றுக்குழாய்கள் பெரிய அளவிலான HUME குழாய்கள் / HDPE குழாய்கள்) மனைப்பிரிவு சாலைகளின் வெளிப்புற விளிம்புகளில் அமைக்கப்பட வேண்டும்.

APPROVAL No. : SWP / DTCP / NAMAKKAL/ LAYOUT No. : 19 / 2026

திரு.ப.திவாகர்
அளவர்/உதவி வரைவாளர்

Signature valid
Signed by: Assistant Director
Location:Namakkal
Date:2026.02.04 12:21:09

திரு.செ.சந்தியா
வரைவாளர் நிலை - III

Signature valid
Signed by: Village Panchayat President
Location:Namakkal
Date:2026.04.03 13:11:05

திருமதி.பொ.யமுனாதேவி
மேற்பார்வையாளர்/வரைவாளர் நிலை - II

உதவி இயக்குநர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
நாமக்கல்.